1990 ஏப்ரல் 20]

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கு சென்னையில் Free Coaching Centre for I. A. S. Training என்று ஒரு மையம் நீண்டகாலமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த மையத்தில் தென்னிந்தியாவைச் சேர்ந்த, வட மாநிலத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இங்கு சேர்ந்து படிக்கிறார்கள். அந்த மையத்திலிருந்து சென்ற ஆண்டு தேர்வு பெற்றவர்கள் எத்தனை பேர்? அதிலும் குறிப்பாக, தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்., தேர்வு பெற்று இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; மாண்புமிகு தலைவரவர்களே, இதுபற்றி விவரமான விடை இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரமாக அளிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரத்த சேமிப்பு வங்கி

3366*—திரு. ஏ. சுப்பு** :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசிபுரம் அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி ஒன்று ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) இராசிபுரம் அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி ஆரம்பிக்கும் திட்டம் தற்போது இல்லை.

பொறையாறு அரசு மருத்துவ மனை

3772*—திரு. எம். முகமது சித்திக்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறையாறு அரசு மருத்துவமனை நவீனமயமாக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

வரும் ஆண்டுகளில் அரசின் நிதி ஆதாரங்களைப் பொறுத்தும் மருத்துவமனைத் தேவைகளுக்கேற்பவும், இம் மருத்துவ மனையில் புதிய கட்டிடங்கள் கட்டும்போது பரிசீலிக்கப்படும்.